# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


பேச்சுப் போட்டி 2024

## ஆண்டு 8

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

மதிப்புக்குரிய நடுவர்களே! ஆசிரியர்களே! மற்றும் சபையோர்களே!
அனைவருக்கும் முதற்கண் பணிவான வணக்கம்.

# தனிநாயகம் எங்கள் தமிழ்நாயகம்

**”தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்”**
என்ற பாரதியாரின் கனவை நனவாக்கி தரணியெங்கும் தமிழோசை முழங்கச் செய்தவர் தமிழறிஞர் **தனிநாயகம் அடிகளார்.**

**சேவியர் நிக்கலஸ்** எனும் இயற்பெயர் கொண்ட இவர் ஈழத்தில் பிறந்து, அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழிலக்கியத்தில் பட்டம் பெற்று, மலேசிய பல்கலைக் கழகத்தின் தமிழ் பீடாதிபதியும் ஆனார்.

எங்கள் தமிழ்நாயகம், தமிழ் வளர, தமிழர் பண்பாடு சிறக்க அரிய தொண்டுகள் ஆற்றிய தொண்டர்.

உலக தமிழறிஞர்களை **‘அனைத்துலக தமிழாராய்ச்சி நிறுவனம்’** என்ற குடையின் கீழ் ஒன்றிணைத்த தலைவர்.

முதலாவது **உலகத்தமிழாராய்ச்சி** மாநாட்டை வெற்றிகரமாக நடாத்திக் காட்டிய சாதனையாளர்.

பல நாடுகளுக்கும் பயணம் செய்து தமிழுக்கு உலகப் பெருமையை தேடித் தந்த தமிழ்த் தூதுவர்.

அச்சேறிய முதல் தமிழ் நூல்களைக் கண்டுபிடித்த ஆய்வாளர்.

**தமிழ்ப்பண்பாடு** (Tamil Culture) எனும் ஆங்கில இதழினூடாக தமிழின் பெருமையை மேற்குலகிற்கு அறிவித்த ஆசான்.

ஐரோப்பிய மொழித்துறை போன்று தமிழ்த்துறையும் நவநாகரிகமடைய வேண்டும் என எடுத்துரைத்த மறுமலர்ச்சியாளர்.

ஒப்பீட்டு இலக்கியத்துறையால் தமிழுக்கு பொலிவூட்டிய படைப்பாளி.

மேலும், தமிழ் மொழியை உலகிற்கு பக்தி மொழியாக அறிவித்த மகானும் கூட.



**”ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு”**
வேற்றுமையில் ஒற்றுமை கண்ட **தனிநாயகம்அடிகளாரின்** கொள்கை
வழியில் நாமும் **தமிழை வளர்ப்போம்!**

நன்றி
வணக்கம்.

ஆக்கம் :
ஆசிரியர் திருமதி சாந்தினி ஜெயதேவன்

**பேச்சுப் போட்டி எதிர்வரும் 01.06.2024 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.**